# LOYOLA COLLEGE (AUTONOMOUS), CHENNAI – 600 034

**U.G.** DEGREE EXAMINATION – **LANGUAGES**

SECOND SEMESTER – NOVEMBER 2016

**TL 2085 - GENERAL TAMIL - II**

Date: 08-11-2016 Dept. No. Max. : 100 Marks
Time: 01:00-04:00

**பகுதி - அ (10 x 2 = 20 மதிப்பெண்கள்)**

**விடையொன்றுக்கு 20 சொற்களில் எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க.**

01. இரட்டைக் காப்பியங்கள் எவை?
02. மணிமேகலைக் காப்பியத்தில் இடம்பெறும் ஐவேறு வனங்களின் பெயர்களை எழுதுக.
03. ஏமாங்கத நாட்டின் இயற்கை வளத்தைச் சுருக்கமாக எழுதுக.
04. கோலியாத்தை வீழ்த்த சவுல் மன்னன் வெளியிட்ட அறிவிப்பு என்ன?
05. தாவீது பயன்படுத்திய போர்க்கருவிகள் எவை?
06. ‘யாதும் ஊரே யாவரும் கேளிர்
    தீதும் நன்றும் பிறர்தர வாரா’ - விளக்குக.
07. ‘கான மஞ்ஞை யறையீன் முட்டை
    வெயிலாடு முசுவின் குருளை யுருட்டும்’ - பொருள் தருக.
08. எட்டுத் தொகையில் இடம்பெற்ற அக நூல்கள் நான்கினை எழுதுக.
09. நிறுத்தக் குறிகள் என்றால் என்ன?
10. கேள்விக்குறி வருமிடங்களைச் சான்றுகளுடன் கூறுக.

**பகுதி - ஆ (5 x 7 = 35 மதிப்பெண்கள்)**

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒன்றரைப்பக்க அளவில் விடையளிக்க.**

11. கண்ணகி கோவலனுக்கு உணவு பரிமாறல் குறித்து எழுதுக.
12. கள் உண்ணாமை எனும் அதிகாரத்தில் வள்ளுவர் கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.
13. அன்னாய் வாழிபத்து மூலமாக ஐங்குறுநூறு உணர்த்தும் செய்திகளைத் தருக.
14. பெண்மையின் பெருமை பேசும் நற்றிணைப் பாடற் கருத்துகளை எழுதுக.
15. தற்காலக் கவிதைகளில் சுற்றுச்சூழல் சிந்தனைகள் குறித்து விளக்கி எழுதுக.
16. பௌத்தர் தமிழுக்கு ஆற்றிய தொண்டு யாவை?
17. கல்வி உதவித்தொகை வழங்குவதற்கு ஆவன செய்யவேண்டி, கல்லூரி முதல்வருக்குக் கடிதம் எழுதுக.

**பகுதி - இ (3 x 15 = 45 மதிப்பெண்கள்)**

**மூன்றுபக்க அளவில் விடையளிக்க.**

18. இராமனின் கொலைச் செயலைக் கண்டித்து வாலி நிகழ்த்திய உரைய யாது?

    **( அல்லது )**

    ‘பல்லியும் இசைந்தன’, ‘தாயும் மகளும்’ எனும் தலைப்புகளில் அமைந்த கலித்தொகைப் பாடற் கருத்துகளை விவரி.

19. ‘தமிழரின் வானவியல் சிந்தனை’ குறித்து விளக்குக.

    **( அல்லது )**

    ‘தமிழும் கணினியும்’ குறித்து கட்டுரை வரைக.

20. ஐம்பெருங்காப்பியங்கள் குறித்து கட்டுரை எழுதுக.

    **( அல்லது )**

    திருக்குறளின் அமைப்பும் சிறப்பும் குறித்து விவரி.

*********